செ.வெ.எண்.422 நாள்.25.05.2010

# ஆரோக்யா 2010

இந்திய மருத்துவ முறையின் ஒருங்கிணைந்த ஆரோக்யா 2010 கண்காட்சி சென்னையில் நந்தம்பாக்கத்திலுள்ள வர்த்தக மையத்தில் 27.05.2010 முதல் 30.05.2010 முடிய 4 நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககமும் இந்திய அரசின் ஆயுஷ் மருத்துவத் துறையும் இணைந்து இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தின் வழியாக இக்கண்காட்சியை நடத்துகின்றன. இதில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவுகளின் சிறப்புகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான்கு நாட்கள் நடைபெறும் இம் மருத்துவக் கண்காட்சியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட தலைப்புகளில் மருத்துவ வல்லுநர்கள் உரையாற்றுவார்கள்.

- வாழ்க்கைமுறை மாற்றத்தினால் ஏற்படும் நோய்கள்
- மன அழுத்தம்
- முதியோர் நலன்
- தாய் சேய் நலம்
- உணவும் சுகாதாரமும்

மேலும் குறிப்பிட்ட நோய்களான உடற்பருமன், தோல் நோய்கள், இதய நோய்கள், மூட்டுவலி , சிறுநீரக கற்கள் போன்ற நோய்களுக்கு ஒவ்வொரு துறையைச் சார்ந்த மருத்துவர்கள் விரிவாக விளக்கிக் கூற உள்ளார்கள்.

யோகா நேரடி செய்முறை விளக்கங்களும், பொதுமக்களுக்கான மருத்துவ வினாடி வினா நிகழ்ச்சிகளும், மருத்துவ விழிப்புணர்ச்சி, எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி குறு நாடகங்களும் நடைபெறவுள்ளன. வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெறும் பொதுமக்களுக்குத் தினந்தோறும் நிகழ்ச்சியின் முடிவில் பரிசுகள் வழங்கப்படும்.

கண்காட்சியில் நிறுவப்பட்டுள்ள அரசு சார்ந்த கண்காட்சி மையங்கள் (Stalls) பின்வருமாறு:

டாம்ப்கால், எய்ட்ஸ், சுற்றுலாத்துறை, மக்கள் நல்வாழ்வுத் திட்டம், தேசிய ஊரக நல வாழ்வு இயக்கம், மாநில மருத்துவத் தாவர வாரியம் மற்றும் தோட்டக் கலைத்துறை, சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், ஓமியோபதி, இந்திய மருத்துவ இயக்ககம் என்ற வகையில் அரசு சார்பில் 14 கண்காட்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்தந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தனித்தனியே இந்திய மருத்துவத்துறையில் குறிப்பிட்ட பிரிவைப் பற்றி விளக்கும் வகையில் விளக்கங்களை கண்காட்சியில் காட்சிப் படுத்தி உள்ளனர். மேலும் 24 தனியார் விற்பனை மையங்களுக்கும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

மருத்துவ நலவாழ்வுச் சுற்றுலா, மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்கள், மூலிகை மருந்துகள், மருத்துவ நூல்கள், மருத்துவ இதழ்கள், மருத்துவ மின்உபகரணங்கள், மருத்துவமனை உபகரணங்கள், மூலிகை மருத்துவம், பஞ்சகர்மா போன்ற பலவும் கண்காட்சியில் இடம் பெறும். மூலிகைக் கண்காட்சி, ஓலைச்சுவடிகள் கண்காட்சி, இந்திய மருத்துவ நூல்கள் கண்காட்சி மற்றும் விற்பனை போன்றனவும் இக்கண்காட்சியில் இடம் பெறும்.

2/3

சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய ஐந்து மருத்துவ முறைகளில் மருத்துவர்கள் இலவச ஆலோசனை வழங்குவார்கள். அவற்றோடு இலவச மருந்துகளும் நோயாளிகளுக்கு வழங்கப்படும்.

27–5–2010 காலை 11–00 மணியளவில் நிதியமைச்சர், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கண்காட்சியை துவக்கி வைத்து பேருரை ஆற்றவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையுரை ஆற்றவும் மாண்புமிகு இந்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை இணை அமைச்சர் திரு. எஸ். காந்தி செல்வன் அவர்கள் கண்காட்சி கையேட்டினை வெளியிட்டு சிறப்புரை ஆற்றவும், இசைந்துள்ளார்கள்

30–5–2010 அன்று மாலை 4–00 மணியளவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி விழா நிறைவுரை ஆற்றவும் இசைந்துள்ளார்கள்.

கண்காட்சிக்கு பொது மக்கள் இலவசமாக அனுமதிக்கப்படுகிறார்கள்.

=======

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

P.R. No. 422 Date. **May 25, 2010**

**PRESS RELEASE**

A comprehensive exhibition showcasing the best from all the Indian Systems of Medicine will be held at Chennai Trade Centre, Nandambakkam, Chennai for four days from 27.05.2010 to 30.05.2010. The AROGYA will be open on to all from 10 A.M to 7.PM.

Department of Ayush of the Government of India and the Department of Indian Medicine and Homeopathy of the Government of Tamil Nadu are jointly organizing this AROGYA exhibition through Indian Trade Promotion Organisation. Stalls in the AROGYA are planned out with a view to bring about awareness in general public about Siddha, Ayurveda, Unani, Homeopathy, Yoga and Naturopathy systems. There will be Free Entry and free medical treatment.

During the AROGYA 2010 Exhibition, Experts will deliver speeches on the following topics for the benefit of the general public.

- Lifestyle Disorders
- Stress
- Geriatric Care
- Mother & Child Health
- Food and Nutrition

Specialists from these Systems branches will also extensively explain and reveal facts regarding obesity, skin diseases, Heart Diseases, Arthritis, Kidney stones and effective Management of these conditions, besides how to avoid them.

Live demonstrations in Yoga, Medical Quiz programs for the public, Medical awareness and, skits on Aids Awareness will also be conducted. Winners from participants of the Quiz programs from the public will be awarded prizes at the end of the programs.

14 stalls showcasing the systems are being put up by the Government departments. These include TAMPCOL, Aids Control Society, Tourism, Health system Projects, National Rural Health Mission, State Medicinal Plants Board and Department of Horticulture, Departments of Siddha Ayurveda, Unani, Homeopathy, Naturopathy& Yoga of Directorate of Indian Medicine. Students from the respective colleges belonging to the various Systems of Indian medicine have visualized special Highlights of their systems of medicine and are showcasing it in the AROGYA.

24 stalls from the Private Sector have also been organized by the India Trade Promotion Organisation.

Display profile includes Medical Tourism, Herbal Medicines, Panchakarma, Medical books, Medical Journals, Medical Electronic Equipments, Hospital Equipments, Exhibition on Herbs, Exhibition and sales of books on Indian Medicine.

There will be Free consultations by the specialists from all the five systems -- in Siddha, Ayurvedha, Unani, Homeopathy, Yoga and Naturopathy. Free medicines will be given.

The AROGYA 2010 will be inaugurated by Hon'ble Thiru Prof K. Anabalagam, Minister for Finance, Government of Tamil nadu. The presidential address for the AROGYA 2010 will be delivered by Hon'ble Thiru M.R.K.Panneerselvam, Minister for Health, Government of Tamil nadu at 11.00 am on 27.05.2010. The Special address for the AROGYA 2010 will

be delivered by Hon'ble Thiru S.Gandhiselvan , Union Minister of State for Health, Government of India and also he will release the Hand book of the AROGYA 2010 EXHIBITION . The valedictory function will be held on 30 May 2010 at 4.00 p.m. and Hon'ble Thiru M.R.K. Panneerselvam will deliver the valedictory address.

**AROGYA Exhibition is open to all and entry is free.**

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.